# கடல் கடைந்து.



கடல்கடைந்து அமுதம் எடுத்திட திருமாலே நீயும்,
உடல்நோக மலைதனை முதுகில் சுமந்தனையே !

கடல்கடைந்து......

ஆழ்கடலை தேவர்களும் அசுரர்களும் ,
அரக்கத்தனமாய் கடைய ஆரம்பித்திட ;
மூழ்கயிருந்த மந்திரமலையை தாங்கிட ,
இரக்கத்துடன் கூர்மமாய் அவதரித்தாய் !

கடல்கடைந்து....

அமுதம் கடலிருந்து வெளிவருமுன்பே ,
பிறந்த ஆலகாலத்தை அரனும் பருகிட ;
குமுதத்தில் திருமகள் தோன்றிடுமுன்பு,
சிறந்த பொருள்களை தோன்றுவித்தாய் !

கடல்கடைந்து.......